இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**முதலில் புனித பேதுருவைப் பற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை, திருஅவையில் பிரிவினைகளும் குழப்பங்களும் நிலவிய காலத்தில்கூட, முதல் திருத்தந்தையான பேதுரு ஒற்றுமையையும் நற்கருணை ஒன்றிப்பையும் எவ்வாறு வளர்த்தார் என்பதை நினைவுபடுத்தினார்.**

# புனித பேதுரு, பவுல் பெருவிழா: புதிய பேராயர்களை 'நல்ல ஆயர்களாக' வாழ அழைக்கும் திருத்தந்தை



புனித பேதுரு மற்றும் புனித பவுல் பெருவிழா திருப்பலியின் போது, திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள், உரோமை நகரின் பாதுகாவலர்களான இவ்விரு புனிதர்களின் வாழ்விலிருந்து ஊக்கம் பெறுமாறு விசுவாசிகளுக்கு அழைப்பு விடுத்தார். அவர்கள் தங்கள் பலவீனங்களுக்கு மத்தியிலும், நற்செய்திக்கு எவ்வாறு சிறந்த சாட்சிகளாகத் திகழ்ந்தார்கள் என்பதை அவர் எடுத்துரைத்தார். மேலும், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட விசுவாசிகளை வழிநடத்த 'பல்லியம்' (Pallium - ஆயர்களின் கழுத்துப்பட்டி) என்னும் புனிதப் பட்டையைப் பெற்றுக்கொண்ட புதிய உரோமைப் பகுதிப் பேராயர்கள் (Metropolitan Archbishops), ஆண்டவரைப் பின்பற்றி 'நல்ல ஆயர்களாக' வாழ வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். இந்தத் திருப்பலியின் போது, புதிய பேராயர்களுக்கான 'பல்லியம்' புனிதப் பட்டையை ஆசீர்வதித்து அணிவிக்கும் பாரம்பரிய வழிபாடும் நடைபெற்றது.

## திருச்சபையின் இரு னண்கள்

பேதுருவைத் தனது மந்தையை வழிநடத்தும் ஆயராகவும், பவுலைப் பிறவினத்தாருக்கான நற்செய்தித் தூதராகவும் இயேசு தேர்ந்தெடுத்தார் என்பதை நினைவு கூர்ந்தார். "இவ்விருவரிலும் திருஅவையின் இரு பெரும் தூண்களை நாம் காண்கிறோம்," என்று அவர் கூறினார்.

முதலில் புனித பேதுருவைப் பற்றிக் குறிப்பிட்ட திருத்தந்தை, திருஅவையில் பிரிவினைகளும் குழப்பங்களும் நிலவிய காலத்தில்கூட, முதல் திருத்தந்தையான பேதுரு ஒற்றுமையையும் நற்கருணை ஒன்றிப்பையும் எவ்வாறு வளர்த்தார் என்பதை நினைவுபடுத்தினார்.

இருப்பினும், இந்தத் மாண்புமிகுந்த நிலை, பேதுரு முழுமையானவர் அல்லது குறைபாடற்றவர் என்று அர்த்தமல்ல. இயேசுவின் பாடுகளின் போது, பேதுரு தனது போதகரை மூன்று முறை மறுதலித்ததையும், பின்னர் தனது தவறை உணர்ந்து கண்ணீர் சிந்தி மனந்திரும்பியதையும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார். மேலும், சில சூழ்நிலைகளில் பேதுருவின் செயல்களில் இருந்த முரண்பாடுகளைப் புனித பவுல் நேருக்கு நேர் கண்டித்ததையும் அவர் நினைவு கூர்ந்தார்.

"ஆயினும் பேதுரு தன் தவறுகளை ஒப்புக்கொள்ளவும், மனம் வருந்தவும் அறிந்திருந்தார். அவர் சோர்ந்து போகாமலும், நற்செய்தியை அறிவித்து கிறிஸ்துவின் மந்தையை ஒன்று சேர்க்கும் தனது பணியில் பின்வாங்காமலும் இருந்தார். இறுதியில், நாம் இப்போது கூடியிருக்கும் இந்த உரோமை நகரிலேயே அவர் மறைசாட்சியாக உயிர் துறந்தார்" என்று திருத்தந்தை கூறினார்.

## இளம்பருவ சவுலின் இதயத்தை வென்ற கடவுள்

இளம் வயதினனான சவுலின் இதயத்தில் கடவுள் ஒரு பெரிய அற்புதத்தைச் செய்தார். அவனது இதயத்தை வென்று, நற்செய்திக்கு மனந்திரும்பச் செய்து, அவனுக்குப் புதியதொரு பெயரையும் (பவுல்) சூட்டினார். பின்னர் உலகெங்கும் நற்செய்தியை அறிவிக்க அவரை அனுப்பினார்.

பேதுருவைப் போலவே, பவுலும் இதே உரோமை நகரில்தான் தனது உயிரைத் தியாகம் செய்து நற்செய்திக்குச் சான்றளித்தார் என்பதைப் பரிசுத்த தந்தை நினைவு கூர்ந்தார். "பிறவினத்தாரின் திருத்தூதரான பவுல், கடவுளுடைய வார்த்தையின் வல்லமையால் தன்னை முழுமையாக மாற்றிக்கொண்டார். அந்த வார்த்தை அவரை வன்முறைப் பாதையிலிருந்து மீட்டு, அன்பின் பாதைக்கு அழைத்துச் சென்றது."

புனித அகஸ்டினாரின் கூற்றை மேற்கோள் காட்டிய திருத்தந்தை, "திருஅவையைத் துன்புறுத்தியவனை கடவுள் அமைதியின் தூதராக மாற்றினார்; அவனது பாவங்கள் அனைத்தையும் மன்னித்து, பிறருடைய பாவங்களை மன்னிக்கும் ஒரு புனிதமான பணியில் அவரை அமர்த்தினார்" என்று குறிப்பிட்டார்.

தமிழாக்கம் ஹெரால்டு



# 28-வது எபிஸ்கோப்பல் பிராந்திய வழிபாட்டுக்குழு (ERLC) கூட்டம்

ஜொகூர் பாரு: 28-வது எபிஸ்கோப்பல் பிராந்திய வழிபாட்டுக்குழுவின் (Episcopal Regional Liturgy Commission - ERLC) உறுப்பினர்கள் தங்களது ஆண்டுக் கூட்டத்திற்காக ஜொகூர் பாருவில் ஒன்று கூடினர். இக்கூட்டம் திருப்பலியுடன் தொடங்கப்பட்து. இதில் உரையாற்றிய செயலர் அருட்பணி வின்சென்ட் சின், நற்செய்தியின் அழைப்பிற்கு ஏற்ப, நாம் நமது வசதியான வாழ்க்கையைத் தாண்டி, புனிதத்தன்மையை அடைய "இன்னும் ஒரு மைல் கூடுதலாக நடக்க" (அதிக முயற்சி எடுக்க) வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

### பாரம்பரிய லத்தீன் திருப்பலி

இக்குழுவின் தலைவரான கர்தினால் வில்லியம் கோ (Cardinal William Goh) தனது தொடக்க உரையில், சிங்கப்பூரில் உள்ள சில கத்தோலிக்கர்களிடையே 'பாரம்பரிய லத்தீன் திருப்பலி' (Traditional Latin Mass) மீதான ஆர்வம் அதிகரித்து வருவதைக் குறிப்பிட்டார்.

கத்தோலிக்க திருஅவை ஏற்கனவே லத்தீன் திருப்பலியை (Extraordinary Form) அனுமதிக்கிறது என்பதை கர்தினால் கோ வலியுறுத்தினார். எனினும், சில இடங்களில் வழக்கமான திருப்பலிகள் (Ordinary Form / Novus Ordo) போதிய பக்திமுயற்சியுடன் நடத்தப்படாததே, சில கத்தோலிக்கர்கள் அதிக பக்தியைத் தேடி வேறு இடங்களுக்குச் செல்லக் காரணமாக அமைகிறது என்று அவர் கவலை தெரிவித்தார். எனவே, திருப்பலி மிகவும் மரியாதையுடனும், அழகாகவும், பக்தியுடனும் கொண்டாடப்பட வேண்டும் என்றும், அதற்கு குருமாணவர்களுக்கும் (Seminarians) குருக்களுக்கும் சிறந்த வழிபாட்டுமுறைப் பயிற்சி (Liturgical Formation) அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

"வழிபாட்டு முறையானது தகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் கொண்டாடப்படும் போது, மக்கள் இயல்பாகவே இறைவனை அனுபவிப்பார்கள்; திருஅவையிலும் நிலைத்திருப்பார்கள்," என்று கர்தினால் கூறினார்.

### வழிபாட்டுமுறை மாற்றங்கள் மற்றும் புதிய திட்டங்கள்

சனிக்கிழமை அல்லது திங்கட்கிழமைகளில் வரும் சில பெருவிழாக்களை (Solemnities) அதற்கு அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றுவது குறித்தும், அதனால் ஏற்படும் ஆவிக்குரிய தாக்கங்கள் குறித்தும் இக்குழு விவாதித்தது. மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புரூணை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை (CBCMSB) இதுகுறித்து முடிவெடுப்பதற்கு முன் ஆழமாக ஆலோசிக்க வேண்டும் என்று கர்தினால் கூறினார்.

மேலும், முன்மொழியப்பட்டுள்ள 'படைப்பின் திருவிழா' (Feast of Creation) ஞாயிற்றுக்கிழமைகளில் கொண்டாடப்படக் கூடாது என்பதில் கர்தினால் உடன்பட்டார். இறைவனை வழிபடுவதற்கும், இறைவனின் படைப்புகளைப் போற்றுவதற்கும் இடையே மக்களுக்குக் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆஸ்திரேலியா, அயர்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆயர் பேரவைகளால் தயாரிக்கப்பட்டு வரும் கூட்டு வாசகப் புத்தகத் திட்டம் (Joint Lectionary Project) 2028-ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### புதிய கத்தோலிக்கர்களுக்கான மற்றும் குழந்தைகளுக்கான திருப்பலிப் பயிற்சி

அருட்பணி சைமன் ஹோ, அமெரிக்காவில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 'முதியோருக்கான கிறிஸ்தவப் புகுமுக நெறிமுறை' (RCIA/OCIA - திருத்தப்பட்ட வடிவம்) குறித்து விளக்கினார். புதிய கத்தோலிக்கர்கள் விசுவாசக் கோட்பாடுகளை நன்றாகக் கற்றறிந்தாலும், அவர்கள் பெறும் வழிபாட்டுச் சடங்குகளின் ஆழமான அர்த்தத்தைப் புரிந்துகொள்வதில் குறைபாடு உள்ளது என்று உறுப்பினர்கள் கவலை தெரிவித்தனர்.

குழந்தைகளுக்கான திருப்பலிகள் குறித்துப் பேசிய அருட்பணி ஹோ, ஒன்பது வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சிறப்பு நற்கருணை மன்றாட்டுகள் (Eucharistic Prayers) 2011-ல் புதிய உரோமை திருப்பலிப் புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டு, இப்போது அவை தனி வழிபாட்டுப் புத்தகத்தில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

### பன்மொழித் திருப்பலிகள் மற்றும் திருச்சபை விதிகள்

திருப்பலியின் ஒருமைப்பாட்டைப் பாதிக்கும் வழிபாட்டு முறைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

- திருப்பலி பொதுவாக ஏதேனும் ஒரு மொழியில்தான் நடத்தப்பட வேண்டும்.
- வாசகங்கள், விசுவாசிகள் மன்றாட்டு மற்றும் சில பாடல்களுக்கு மட்டும் பிற மொழிகளைப் பயன்படுத்தலாம்.
- ஆனால், நற்கருணை மன்றாட்டின் (Eucharistic Prayer) எந்தப் பகுதியையும் பல மொழிகளில் மீண்டும் மீண்டும் சொல்லக் கூடாது.
- திருப்பலி நிறைவேற்றும் குருக்கள், அங்கீகரிக்கப்பட்ட திருப்பலி நூல்களின் வார்த்தைகளைத் தாங்களாகவே கூட்டவோ, குறைக்கவோ அல்லது மாற்றவோ கூடாது என்று விதிகள் நினைவூட்டப்பட்டன.

தமிழாக்கம் ஹெரால்டு

# கிறிஸ்துவின் மீட்பு 2033-ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாட அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் அழைப்பு

உரோமை நகருக்கு வந்திருந்த கான்ஸ்டான்டிநோபிளின் தன்னாதிக்கம் பெற்ற கிறிஸ்தவ சபையின் (Ecumenical Patriarchate) பிரதிநிதிகளிடம் பேசிய திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள், போர் மற்றும் பிரிவினைகள் மலிந்துள்ள இந்தத் தற்காலத்தில், அனைத்துக் கிறிஸ்தவர்களும் விசுவாசத்திற்குரிய அமைதியின் சாட்சிகளாக வாழ அழைக்கப்படுகிறார்கள் என்று கூறினார். மேலும், ஆண்டவர் இயேசுவின் மீட்பின் ஈராயிராமாவது (2000) ஆண்டைக் குறிக்கும் 2033-ஆம் ஆண்டு ஜூபிலி பெருவிழாவை அனைத்துக் கிறிஸ்தவ சபைகளும் இணைந்து கொண்டாட ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் அவர் வெளிப்படுத்தினார்.

"2033-ஆம் ஆண்டில் வரவிருக்கும் இயேசுவின் மீட்பின் இரண்டாம் மில்லினியம் (ஈராயிரமாவது ஆண்டு) கொண்டாட்டத்தை நோக்கி, உலகில் உள்ள அனைத்துக் கிறிஸ்தவப் பிரிவினரும் இணைந்து பயணிக்க வேண்டும். உயிர்த்தெழுந்த ஆண்டவருக்குச் சாட்சிகளாக வாழ நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அழைப்பையும் கொடையையும் நாம் மீண்டும் கண்டறிய வேண்டும்."

புனித பேதுரு, புனித பவுல் பெருவிழாவை முன்னிட்டு, வத்திக்கானுக்கு வருகை தந்திருந்த தன்னாதிக்கம் பெற்ற கிறிஸ்தவ சபையின் தூதுக் குழுவினரிடம் திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள் இதனைத் தெரிவித்தார்.

## நைசியா முதல் பொதுச்சங்கத்தின் 1,700-வது ஆண்டு நிறைவு

இது குறித்துப் பேசிய திருத்தந்தை, இஸ்னிக் (İznik) நகரில் புனித அந்திரேயா பெருவிழா நன்னாளில் நடைபெற்ற 'நைசியா முதல் பொதுச்சங்கத்தின்' (First Council of Nicaea) 1,700-வது ஆண்டு நிறைவு நினைவுக்கூறல், "எல்லாருக்கும் தந்தையாகிய கடவுள் மீது விசுவாசம் கொண்டு, இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும் இறைமகனாகவும் ஏற்கும் விசுவாசிகளுக்கு இடையே ஏற்கனவே இருக்கும் ஆழமான ஒற்றுமைக்கு ஒரு சிறந்த சான்றாகும். மேலும், தூய ஆவியானவர் நம்மை வழிநடத்தி முழுமையான உண்மைக்கும் ஒற்றுமைக்கும் இட்டுச் செல்கிறார் என்பதற்கு இது ஓர் அடையாளம்" என்றார்.

"அந்த நினைவு நிகழ்வு, 'நைசியா விசுவாச அறிக்கை' (Nicene Creed) நமது இந்த ஒற்றுமைப் பயணத்தின் அடித்தளமாகவும் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது. இது பன்முகத்தன்மைக்குள்ளான உண்மையான ஒற்றுமையின் மாதிரியை நமக்கு வழங்குகிறது: அதாவது மூவொரு கடவுளின் ஒருமைப்பாடு" என்று திருத்தந்தை லியோ வலியுறுத்தினார்.

## அமைதியின் சாட்சிகளாக வாழ கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு

"போர்களும், வளர்ந்து வரும் பிரிவினைகளும், கலாச்சார மற்றும் சமூகப் பிளவுகளும் நிறைந்த இந்த காலகட்டத்தில், தங்களுக்குள் சமரசம் செய்துகொண்டு, ஒரே விசுவாசத்தை அறிக்கையிடும் கிறிஸ்தவர்கள், அமைதியின் உண்மையான சாட்சிகளாக வாழ அழைக்கப்படுகிறார்கள். நல்மனம் கொண்ட அனைத்து மக்களும் அமைதியை உருவாக்க எடுக்கும் முயற்சிகளுக்குக் கிறிஸ்தவர்கள் தங்களின் தீர்க்கமான பங்களிப்பை வழங்க வேண்டும்" என்று பரிசுத்த தந்தை அழுத்தமாகக் கூறினார்.

"இன்றைய சவால்களான அமைதி, புதிய தொழில்நுட்பங்களின் சரியான பயன்பாடு மற்றும் இயற்கையைப் பாதுகாத்தல் போன்ற விஷயங்களில் கிறிஸ்தவர்களுக்கிடையே அதிக ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. இது இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியிலிருந்தே பிறக்கிறது" என்று திருத்தந்தை தெரிவித்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# மலாக்கா-ஜொகூர் மறைமாவட்ட காரித்தாஸ் (Caritas MJD) அமைப்பின் பொதுக்குழுக்கூட்டம்



மலாக்கா-ஜொகூர் மறைமாவட்ட காரித்தாஸ் (Caritas MJD) அமைப்பின் நிர்வாக இயக்குனர் ஆண்ட்ரூ லியோ அவர்கள், கூட்டத்தில் கலந்துகொண்ட 46 உறுப்பினர்களுக்கும் அமைப்பின் செயல்பாடுகள் மற்றும் அதன் கட்டமைப்பு குறித்து விளக்கமளித்தார். காரித்தாஸ் குடையின் கீழ் இயங்கும் பல்வேறு பணிக்குழுக்களின் தடையற்ற செயல்பாடுகளை அவர் எடுத்துரைத்தார். திருஅவையின் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைவதே இதன் முக்கிய நோக்கம் என்றும், 'ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப வெவ்வேறு அணுகுமுறைகளைக்' கையாள்வதே இதன் அடிப்படை என்றும் அவர் விளக்கினார்.

மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர் பெர்னார்ட் பால் அவர்கள், காரித்தாஸ் அமைப்பை ஒரு துடிப்பான இயக்கமாக வடிவமைத்துள்ளார் என்றும்; அது மக்களைச் சந்திக்கவும் (Encounter), வலுப்படுத்தவும் (Empower), ஒளியூட்டவும் (Enlighten), நற்செய்தி அறிவிக்கவும் (Evangelize) தூண்டுகிறது என்றும் கூறினார்.

சமூகப் பணிப் பிரிவின் கீழ் பங்குப் பேரவை சமூகப் பணிக்குழுக்கள் (POHD), செயின்ட் வின்சென்ட் டி பால் சபை (SSVP), சுற்றுச்சூழல் நீதிப் பணிக்குழு (Creation Justice), புலம்பெயர்ந்தோர் பணிக்குழு மற்றும் மறைமாவட்டத்திலுள்ள பல்வேறு காப்பகங்கள் ஆகியவை அடங்கும்.

SSVP மற்றும் POHD ஆகிய அமைப்புகள் ஒரு மனிதனின் ஒட்டுமொத்த நல்வாழ்விற்கான பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. "எந்தவொரு கருணைச் செயலும் நமது பணிக்கு அந்நியமானதல்ல" என்ற பழமொழியை அடிப்படையாகக் கொண்டே இவ்வமைப்பின் உறுப்பினர்கள் செயல்படுகிறார்கள்.

மின்சார சக்கர நாற்காலிகள் (Motorized Wheelchairs) மற்றும் மருத்துவமனை படுக்கைகளைத் தேவையானோருக்கு ஏற்பாடு செய்தல், ஏழை மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல், ஆண்டுதோறும் நடத்தப்படும் பயனுள்ள 'மீண்டும் பள்ளிக்கு' (Back to School) திட்டம், (FINs) வருடாந்திர சுற்றுலா, நகர்ப்புற வீடற்ற மக்களுக்கு வாராந்திர உணவு விநியோகம், முறையான அடையாள ஆவணங்களைப் பெற உதவுதல் மற்றும் மருத்துவச் சிகிச்சைகளுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளைச் செய்தல் போன்றவை SSVP மற்றும் POHD அமைப்புகளின் வழக்கமான பணிகளாகும்.

இதற்கிடையில், சூற்றுச்சூழல் நீதிப் பணிக்குழுவின் தலைவரும், அர்ப்பணிப்புள்ள சேவையாளருமான டாக்டர் மரியா, மறைமாவட்டத்திலுள்ள பங்குகளைச் சுற்றுச்சூழலுக்கு உகந்த பங்குகளாக (Eco-compliant Parishes) மாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்துப் பேசினார்.

பாத்திமா, கனோசா மற்றும் வில்லா பவுலோஸ் காப்பகங்களின் அறிக்கைகளைப் பார்க்கும்போது, அன்றாட வாழ்வில் சில சவால்கள் இருந்தாலும், அனைத்துக் காப்பகங்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருவது தெளிவாகத் தெரிந்தது.

தொடர்ந்து, இந்த ஆண்டு தனது 25-வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் 'மான்ஃபோர்ட் இளைஞர் மையம்' (Montfort Youth Centre) வெற்றிக் கதைகளின் ஒரு முக்கிய அடையாளமாகத் திகழ்கிறது. புனித லூயிஸ் மரியா டி மான்ஃபோர்ட்டின் துணிச்சலான ஆவியும் தொலைநோக்குப் பார்வையும் இந்த மையத்தின் முன்னாள் மற்றும் இந்நாள் மாணவர்களின் எதிர்காலத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது என்பது தெளிவாகிறது.

தற்போது இந்த மையத்தில் சமையல் கலை, கிராஃபிக் வடிவமைப்பு, வெல்டிங், தகவல் தொழில்நுட்பம் (IT), விவசாயம், மின்சாரம் மற்றும் ஆட்டோமோட்டிவ் இன்ஜினியரிங் போன்ற தொழிற்கல்விப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாகக் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த தகுதியுள்ள மாணவர்களை, வரும் ஜூலை மாத சேர்க்கையில் அதிகளவில் இணைக்குமாறு அவசர அழைப்பு விடுக்கப்பட்டது.

சமூகப் பணிகளுக்கான நிதி பெரும்பாலும் ஆலயத்திலுள்ள சாதாரண விசுவாசிகளால் (People of the pew) திரட்டப்படுவதால், தாங்கள் செய்யும் நற்பணிகளின் மூலம் திருஅவையின் நற்சான்றை வெளிப்படுத்த வேண்டும் என்று ஆயர் உறுப்பினர்களைக் கேட்டுக்கொண்டார். நேர்மையான நிர்வாகம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் எந்தவொரு சமரசமும் செய்யக்கூடாது என்று அவர் வலியுறுத்தினார். திட்டங்களைச் செயல்படுத்துவதோடு நின்றுவிடாமல், திருஅவையின் 'ஒன்றிய பயணத்தை' (Synodality) தழுவி, "காண், சீர்தூக்கிப்பார், செயல்படு" (See, Judge, Act) என்ற கோட்பாட்டைக் கடைப்பிடிக்குமாறு அவர் பரிந்துரைத்தார்.

காரித்தாஸ் அமைப்பின் செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்த, பங்குகளில் ஆன்மீகப் பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள், தவக்காலம் மற்றும் வருகைக்காலத் திட்டங்கள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மற்றும் நற்பணி செயல்பாடுகளை மேற்கொள்ள அவர் முன்மொழிந்தார்.

திருஅவையானது வெறும் பராமரிப்பு நிலையை மட்டும் கொண்டிராமல், நற்செய்தி அறிவிக்கும் மறைப்பணித் திருச்சபையாக (Missionary Church) மாற வேண்டும் என்றும் அவர் ஊக்குவித்தார். உள்ளூர் தேவைகளை அறிந்து, ஏழைகளின் அழுகுரலுக்கு இரக்கத்துடன் செவிசாய்க்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஆயர் பெர்னார்ட் பால் அவர்களின் ஆசீரோடு கூட்டம் நிறைவுற்றது.

பிலிப் பாக்கியம், செகாமட்

# சினோட் (ஒருங்கிணைந்த பயண) உணர்வை வளர்க்க மறைக்கல்வித் தலைவர்களுக்கு அழைப்பு





பெட்டாலிங் ஜெயா: கடந்த ஜூன் 22 முதல் 25 வரை, மலேசிய மறைக்கல்வி ஆணையத்தின் (Malaysian Catechetical Commission - MCC) ஆண்டுக் கூட்டம் பெட்டாலிங் ஜெயாவில் நடைபெற்றது. கோலாலம்பூர் மாமறைமாவட்டம் இக்கூட்டத்தை முன்னின்று நடத்தியது. மலேசியாவின் 9 மறைமாவட்டங்களின் பிரதிநிதிகள், சிங்கப்பூர் மாமறைமாவட்டம், புருணை திருத்தூதரகப் பணிநிலத்தின் பார்வையாளர்கள் மற்றும் தேசிய மறைக்கல்வி அலுவலக (NCO) அதிகாரிகள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டு, நமது பிராந்தியத்தில் மறைக்கல்விப் பணியை எவ்வாறு வழிநடத்துவது என்பது குறித்து ஜெபித்து ஆலோசித்தனர்.

முதல் நாள் கூட்டத்தை கோலாலம்பூர் பேராயர் ஜூலியன் லியோ பெங் கிம் திருப்பலி நிறைவேற்றித் தொடங்கி வைத்தார். அவர் மறைக்கல்வி ஆணையத்தின் தலைவர் ஆயர் ஜோசப் ஹீ டெக் குவாங் மற்றும் பிரதிநிதிகளை வரவேற்றார். பேராயர் தனது மறையுரையில், "மக்களின் இதயங்களை இயேசுவை அறிந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் தயாரிப்பதே திருமுழுக்கு யோவானின் முக்கிய பணியாக இருந்தது. அதேபோல, தாங்கள் கற்பிக்கும் பிள்ளைகளையும் பெரியவர்களையும் கிறிஸ்துவிடம் வழிநடத்துவதே மறைக்கல்வி ஆசிரியர்களின் (Catechists) முதன்மையான கடமையாகும்" என்று குறிப்பிட்டார்.

## ஆயரின் தலைமை உரை

இரண்டாம் நாள் கூட்டம் முனைவர் ஸ்டீவன் செல்வராஜு தலைமையில் தொடங்கியது. ஆயர் ஜோசப் ஹீ தனது தொடக்க உரையில், சபா மற்றும் சரவாக் மாநிலங்களின் அறுவடைத் திருநாட்களையும் (காமாத்தான் மற்றும் காவாய்), திருஅவையின் தூய ஆவி பெருவிழாவையும் (Pentecost) ஒப்பிட்டுப் பேசினார். இவை அனைத்துமே நன்றி அறிதல், சமூகம் மற்றும் தூய ஆவியாரின் பொழிவைக் கொண்டாடும் விழாக்கள் என்றார்.

திருஅவை அழைப்பு விடுக்கும் 'சினோதன்மை' (Synodality - ஒன்றிணைந்து பயணித்தல்) என்னும் உணர்வை மறைக்கல்வித் துறையில் வளர்க்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். அதாவது, ஒருவர் ஒருவருக்குச் செவிமடுப்பது மட்டுமல்லாமல், தூய ஆவியாரின் தூண்டுதல்களுக்குச் செவிமடுத்து ஒன்றாகப் பயணிக்க வேண்டும் என்று கூறினார். "மறைக்கல்வி என்பது வெறும் அறிவைப் போதிப்பது மட்டுமல்ல, அது வாழும் கிறிஸ்துவை நேரில் சந்திக்கும் ஒரு அனுபவம்" என்று அவர் வலியுறுத்தினார். மேலும், மறைக்கல்வி ஆசிரியர்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கும் போதே, அவர்களிடமிருந்தும் பலவற்றைக் கற்றுக்கொள்கிறார்கள் என்றும், செயற்கை நுண்ணறிவை (AI) நற்செய்திப் பணிக்குப் பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும் என்றும், கிறிஸ்துவையே எப்போதும் மையமாக வைக்க வேண்டும் என்றும் கூறினார்.

## 6 முக்கிய இலக்குகள்

மறைமாவட்டங்களின் புதிய அறிக்கை வடிவத்தின் மூலம், மலேசிய மறைக்கல்விக்கான 6 முக்கிய தேவைகள் அடையாளம் காணப்பட்டன:

1. தேசிய அளவில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான பயிற்சியைச் சீரமைத்தல்.
2. மறைக்கல்வி ஆசிரியர்களின் பற்றாக்குறையை முறையாக நிவர்த்தி செய்தல்.
3. பெற்றோர்கள் மற்றும் குடும்பங்களின் பங்களிப்பை ஆழப்படுத்துதல்.
4. டிஜிட்டல் (இணையவழி) மறைக்கல்விப் பயன்பாட்டை வேகப்படுத்துதல்.
5. 'நல்ல ஆயன் மறைக்கல்வி' (Catechesis of the Good Shepherd - CGS) திட்டத்திற்கான தெளிவான வழிகாட்டியை உருவாக்குதல்.
6. மறைமாவட்டத் தரவுகளைச் சேகரிக்கும் முறையை ஒன்றிணைத்தல்.

இதில், பெற்றோரின் பங்களிப்பை அதிகரிப்பதே மிக முக்கியமான மற்றும் எளிதில் செய்யக்கூடிய இலக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்காக வழிபாட்டு காலங்களோடு இணைந்த குடும்பச் செயல்பாடுகள் மற்றும் பெற்றோருக்கான பயிற்சித் திட்டங்கள் பரிந்துரைக்கப்பட்டன.

## புதிய முயற்சிகள்

- தேசிய மறைக்கல்வித் தொடர் (MCS): பல மொழிகளில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான வழிகாட்டி புத்தகங்களும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் விசுவாசப் பயணத்தில் உடன்நடக்க உதவும் 10 புத்தகங்கள் கொண்ட 'பெற்றோர் வழிகாட்டி' (Parent's Guide) புத்தகங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
- முதியவர் திருமுழுக்கு: பல மறைமாவட்டங்களில் கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்கும் புதியவர்களின் (Catechumens) எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது மகிழ்ச்சியான அறிகுறியாகும்.
- மறைக்கல்வி ஞாயிறு 2027: திருச்சபையின் சினோடு அழைப்பை ஏற்று, 2027-ஆம் ஆண்டு மறைக்கல்வி ஞாயிறுக்கான கருப்பொருளாக "கிறிஸ்துவுக்குள் ஒன்றாய்" (கலாத்தியர் 3:28) என்பது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. பன்முகத்தன்மை கொண்ட மலேசிய நாட்டில், திருமுழுக்கின் வழியாக நாம் அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றாய் இருக்கிறோம் என்பதை நினைவூட்ட இது தேர்வு செய்யப்பட்டது.
- நல்ல ஆயன் மறைக்கல்வி (CGS): மாண்டிசோரி (Montessori) கல்வி முறையை அடிப்படையாகக் கொண்ட இத்திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது. 3 வயதுக் குழந்தைகள் கூட இதன் மூலம் ஆழமான செப வாழ்வையும் இறை உறவையும் பெறுவதைக் கண்டு பிரதிநிதிகள் வியந்தனர். இதை அனைத்து மறைமாவட்டங்களுக்கும் கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டது.

தமிழாக்கம் ஹெரால்டு

# ஆண்டின் 15ஆம் பொதுக்கால ஞாயிறு

முதல் வாசகம்: எசாயா 55:10-11; இரண்டாம் வாசகம்: உரோமையர் 8:18-23; நற்செய்தி: மத்தேயு 13:1-23

## இறைவார்த்தையே விதை

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து எடுக்கப்பட்ட முதல் வாசகம், கடவுளுடைய வார்த்தையின் வல்லமையைப் பற்றிப் பேசுகிறது. இறைவார்த்தை வானத்திலிருந்து மழையைப் போலப் பொழிகிறது; அது எந்த நோக்கத்திற்காக அனுப்பப்பட்டதோ, அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறும் கையாய் பரலோகத்திடம் திரும்பாது. நற்செய்தியில் இயேசு, விதைப்பவர் மற்றும் விதை பற்றிய சக்திவாய்ந்த உவமையைத் தன் சீடர்களுக்கும் இன்று நமக்கும் கூறுகிறார். ஒரு விவசாயி விதைகளை விதைக்கிறான். அந்த விதைகள் விழுந்த இடத்தையும், அவை வேரூன்றிய விதத்தையும் பொறுத்து, சில விதைகள் மடிந்தன, சில காய்ந்து போயின, சில பலன் தராமல் போயின. ஆனால், மற்ற சில விதைகளோ நல்ல, ஆழமான, வளமான நிலத்தில் விழுந்து, அமோக விளைச்சலைத் தந்தன.

இந்த உவமையின் மூலம் இயேசு தாராளமாகத் தம்மைப் பற்றியே பேசுகிறார் என்பதை நாம் அறிவோம். விதைப்பவரும் விதையும் இயேசுவே; அவரே 'இறைவார்த்தை'. அவர் வானத்திலிருந்து இறங்கி வந்த வார்த்தை ஆவார்; தாம் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும் வரை அவர் தந்தையிடம் திரும்ப மாட்டார். விதைகள் விதைக்கப்படும் நிலம் என்பது நம்முடைய அன்றாட வாழ்க்கைதான். சில நேரங்களில், இயேசு நமக்குச் சொல்லும் வார்த்தைகள், கேட்க விரும்பாத செவிகளில் விழுவது போல ஆகிவிடுகிறது. இயேசுவின் இந்தச் சக்திவாய்ந்த, சவாலான வார்த்தைகளை நாம் கேட்கிறோம்; ஆனால், நம் இதயம் உலக காரியங்களில் மூழ்கி இருப்பதால், அந்த வார்த்தைகள் நம் வாழ்வில் ஆழமாக வேரூன்ற நாம் அனுமதிப்பதில்லை. ஆனால், வேறு சில நேரங்களில், இயேசு நமக்குக் கூறும் வார்த்தைகளைக் கேட்டு, அவற்றை மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். அவை நமக்குள்ளே விதைக்கப்பட அனுமதிக்கிறோம், அவை வேரூன்றுகின்றன, நாம் அவற்றை ஆவிக்குரிய வாழ்வில் வளர்த்தெடுக்கிறோம்; அது நம் அன்றாட வாழ்க்கையின் நற்செயல்களின் வழியாகப் பலன் தருவதைக் காண முடிகிறது.

நாம் திருப்பலிகளில், கடவுளின் வார்த்தை அறிவிக்கப்படுவதைக் கேட்கிறோம். நாம் பாடும் பாடல்கள், திருவிவிலிய வாசகங்கள், நற்செய்தி மற்றும் குருவின் மறையுரை ஆகியவற்றின் வழியாக, நாம் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான ஆவிக்குரிய உணவையும், பெலனையும், நம்பிக்கையையும் பெறுகிறோம். ஆனால், உண்மையான சவால் என்னவென்றால், திருப்பலி முடிந்த பிறகு, அந்த இறைவார்த்தையை நாம் தேவாலயத்திலிருந்து நம் உள்ளத்திற்கும், இல்லத்திற்கும், அன்றாட வாழ்விற்கும் எப்படிக் கொண்டு செல்கிறோம் என்பதுதான். நாம் பெற்றுக் கொண்ட இறைவார்த்தை நம்மை உருவாக்குகிறதா? பிறரை உருவாக்க சாட்சியாக நம்மை நிலைநிறுத்துகிறதா?

புனித பவுல் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில், "கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது" என்று எழுதியுள்ளார். கடவுளின் வார்த்தை எங்கோ தூரத்தில் இல்லை; அது உயிருள்ளதாகவும் ஆற்றல் மிக்கதாகவும் உங்களுக்குள்ளும், எனக்குள்ளும், நம் அனைவருக்குள்ளும் இருக்கிறது. இறைவன் அளிக்கவிருக்கும் குணமளிப்பு, விடுதலை அனைத்தும் இறைவார்த்தைகளுக்குள்ளே அடங்கியிருக்கிறது. நாம் அவருள்ளும் அவரது வார்த்தை நம்முள்ளும் நிலைத்திருந்தால் மிகுந்த கனி தருவோம். இந்த இறைவார்த்தை நமக்குள்ளே ஆழமாக வேரூன்றி, என்றும் நிலைத்திருக்கும் நற்கனிகளை மிகுதியாகத் தந்திடுமாறு செபிப்போம்.

பெர்சியுஸ் ஜேம்ஸ்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015